# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-7 - சீலமில்லா
## (உணர்ந்த ஆழ்வார் எம்பெருமானது திருமேனியைக் கண்டு அணைவதற்காக இரவும் பகலும் வருந்திக் கூப்பிடுதல்)

3073 * சீலம் இல்லாச் சிறியனேலும் * செய்வினையோ பெரிதால் *
ஞாலம் உண்டாய்! ஞான மூர்த்தி! * நாராயணா! என்றென்று **
காலம் தோறும் யான் இருந்து * கைதலை பூசலிட்டால் *
கோல மேனி காண வாராய் * கூவியும் கொள்ளாயே 1

3074 கொள்ளமாளா இன்ப வெள்ளம் * கோதில தந்திடும் * என்
வள்ளலேயோ! வையம் கொண்ட * வாமனாவோ! என்றென்று **
நள்ளிராவும் நன்பகலும் * நான் இருந்து ஓலமிட்டால் *
கள்ள மாயா! உன்னை * என் கண் காண வந்தீயாயே 2

3075 ஈவிலாத தீவினைகள் * எத்தனை செய்தனன் கொல்? *
தாவி வையம் கொண்ட எந்தாய்! * தாமோதரா! என்றென்று **
கூவிக் கூவி நெஞ்சுருகிக் * கண்பனி சோர நின்றால் *
பாவி நீ என்று ஒன்று சொல்லாய் * பாவியேன் காண வந்தே 3

3076 காண வந்து என்கண் முகப்பே * தாமரைக் கண் பிறழ *
ஆணி செம்பொன் மேனி எந்தாய்! * நின்றருளாய் என்றென்று **
நாணமில்லாச் சிறுதகையேன் * நான் இங்கு அலற்றுவதென்? *
பேணி வானோர் காண மாட்டாப் * பீடுடை அப்பனையே 4

3077 அப்பனே! அடலாழியானே! * ஆழ்கடலைக் கடைந்த
துப்பனே! * உன் தோள்கள் நான்கும் * கண்டிடக் கூடுங்கொல்? என்று **
எப்பொழுதும் கண்ணநீர் கொண்டு * ஆவி துவர்ந்து துவர்ந்து *
இப்பொழுதே வந்திடாய் என்று * ஏழையேன் நோக்குவனே 5

3078 நோக்கி நோக்கி உன்னைக் காண்பான் * யான் எனதாவியுள்ளே *
நாக்கு நீள்வன்ஞானம் இல்லை * நாள்தோறும் என்னுடைய **
ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் * அல்ல புறத்தினுள்ளும் *
நீக்கம் இன்றி எங்கும் நின்றாய்! * நின்னை அறிந்தறிந்தே 6

3079 அறிந்தறிந்து தேறித் தேறி * யான் எனதாவியுள்ளே *
நிறைந்த ஞான மூர்த்தியாயை * நின்மலமாக வைத்து **
பிறந்தும் செத்தும் நின்றிடறும் * பேதைமை தீர்ந்தொழிந்தேன் *
நறுந்துழாயின் கண்ணியம்மா! * நான் உன்னைக் கண்டு கொண்டே 7

3080 கண்டு கொண்டென் கைகள் ஆர * நின் திருப்பாதங்கள் மேல் *
எண்திசையும் உள்ள பூக்கொண்டு * ஏத்தி உகந்துகந்து **

தொண்டரோங்கள் பாடியாடச் * சூழ்கடல் ஞாலத்துள்ளே *
வண்துழாயின் கண்ணி வேந்தே! * வந்திடகில்லாயே 8

3081 இடகிலேன் ஒன்றட்டகில்லேன் * ஐம்புலன் வெல்லகில்லேன் *
கடவனாகிக் காலம் தோறும் * பூப்பறித்து ஏத்தகில்லேன் **
மடவன்னெஞ்சம் காதல் கூர * வல்வினையேன் அயர்ப்பாய் *
தடவுகின்றேன் எங்குக் காண்பன் * சக்கரத்தண்ணலையே? 9

3082 சக்கரத்தண்ணலே! என்று * தாழ்ந்து கண்ணீர் ததும்ப *
பக்கம் நோக்கி நின்றலந்தேன் * பாவியேன் காண்கின்றிலேன் **
மிக்க ஞான மூர்த்தியாய * வேத விளக்கினை * என்
தக்க ஞானக் கண்களாலே * கண்டு தழுவுவனே 10

3083 * தழுவி நின்ற காதல் தன்னால் * தாமரைக் கண்ணன் தன்னை *
குழுவு மாடத் தென்குருகூர் * மாறன் சடகோபன் ** சொல்
வழுவிலாத ஒண்தமிழ்கள் * ஆயிரத்துள் இப்பத்தும் *
தழுவப் பாடியாட வல்லார் * வைகுந்தம் ஏறுவரே 11

**அடிவரவு:** சீலம் கொள்ள ஈவில் காண அப்பன் நோக்கி அறிந்து
கண்டு இட சக்கர தழுவி ஏறாளும்